Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 100

போன் 889 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 8 ஸபர் 11 திங்கட்கிழமை [22-5-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல் முதலியவற்றிற்கும்
நவீன முத்துமாலை
முடிமயிர் வகைகளுக்கும்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பொலிஸ் துப்பாக்கிப்பிரயோகத்தினால் நேர்ந்த

# 'கொலை': இளைஞன் மரணம் பற்றி நீதிபதி அளித்த தீர்ப்பு

## "அமைதி ஏற்பட்ட பின்பே இச்சம்பவம் நடந்திருக்கிறது"

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறையில் சென்ற மாதம் 8-ந் திகதி நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்ட ஆர். சிவஞானசுந்தரம் என்ற இளைஞரின் மரணம் 'ஒரு கொலை' என்று இளைஞனின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய பருத்தித்துறை நீதிபதி திரு கே. விக்னராஜா இன்று தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

பொலிஸாரின் துப்பாக்கிப்பிரயோகத்தினால் தான் சிவஞானசுந்தரம் என்ற இளைஞர் கொலையுண்டார் என்று கூறிய நீதிபதி முதலில் நடந்த சம்பவங்கள் முடிவடைந்து அமைதியேற்பட்ட பின்னரே இக்கொலை நடந்திருக்கிறது என்பது சாட்சியங்களில் இருந்து தெளிவாகியிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

பத்து பக்கங்கள் கொண்ட தமது தீர்ப்பை 10-45க்கு வாசிக்கத் தொடங்கிய நீதிபதி திரு. கே. விக்னராஜா 10-57க்கு வாசித்து முடித்தார். தீர்ப்பை அறிய நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் திரண்டிருந்தனர்.

### தவிர்க்கமுடியாதது

சேது நாராயணபிள்ளை, பாலசுப்பிரமணியம் மற்றும் காயமடைந்த அனைவரும் பொலிஸார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நோக்கத்துடன் குண்டாந்தடிப் பிரயோகம் செய்த போதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதும் காயமடைந்தார்கள் என்றும் இவை தவிர்க்கமுடியாதெனவும் நீதிபதி கூறினார்.

சிவஞானசுந்தரம் சுடப்பட்டது பொலிஸார் அமைதியை நிலைநாட்டிய பின்னர்தான் என்பதற்கு ஆதாரமாக பொன்னம்பலம், நடராசா, சந்திரசேகரம் பரராசசிங்கம், கணபதிப்பிள்ளை ஆகியோர் கூறிய சாட்சியத்தைக் காட்டலாம். அவர்களது சாட்சியத்தை நிராகரிக்க இடமில்லையெனவும் நீதிபதி கூறினார்.

காலஞ்சென்றவர் ஆர் வி.ஜி. பீடிவிற்பனையாளர் என்றும் அவர் தனது நெல்லியடியில் இருக்கும்கடைக்கு சம்பவம் நடந்த இரவு 8மணிக்குவந்த பொழுது, தான் பணமும் ஒரு காசோலையும் அவரிடம் கொடுத்ததாக வல்லிபுரம் கூறியசாட்சி இதற்குஆதாரமாக இருப்பதாக நீதிபதி கூறினார். காலஞ்சென்றவர் சம்பவம் நடந்தஇடத்திற்கு வந்ததாகச் சொல்லப்படும் பீடிவான் அவருடையபிரே

[8-ம் பக்கம் பார்க்க]

## கொக்குவில் கிராமசபை தலைவர் மீது நடவடிக்கை

### பார்லிமெண்டில் உதவி மந்திரி

கொழும்பு, ஞாயிறு

கொக்குவில் கிராமசபைத் தலைவர் மீது நடவடிக்கை எடுப்பதுபற்றி உள்ளூராட்சி அமைசசர் ஆராய்ந்து வருவதாகவும் அவரைஏன்பதவி நீக்கம் செய்யக்கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு அவரிடம் கேட்கப்பட்டிருப்பதாகவும் உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் டாக்டர் என். எம். பெரேராவின்கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கொக்குவில் கிராம சபையில் கணக்குப்பரிசோதனை செய்யப்பட்டபோது 31,803 ரூபாய் குறைந்தது கண்டுபிடிக்கப்பட்டது உண்மைதானென்றும் ஆனால் குறைந்த தொகையை சபைத் தலைவர் செலுத்திவிட்டாரென்றும் உதவி அமைச்சர் தெரிவித்தார்.

சிப்பித்தறைக்கு மின்சார விநியோகம் செய்வது சம்பந்தமாக 43,000 செலவிடப்பட்டதுபற்றி உள்ளூராட்சி அமைச்சர் ஆராய்ந்துவருகிறாரென்றும் இத்தொகையும் களவுபோனதாக ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையில் கூறப்பட்ட 17,058 ரூபாய் 18சதத்தையும் ''சேர்சார்ஜ்'' தொகையாக கட்ட வேண்டும் என கிராமசபைத் தலைவருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் உதவி மந்திரி தெரிவித்தார்.

சங்கானையில்

## இன்று ஆரம்பமாகும் திருக்குறள் மகாநாடு

### நாகலிங்க சுவாமிகள் அரங்கில் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ் மறைக் கழகத்தின் 15வது திருக்குறள் மாநாடு சங்கானை இந்து வாலிப மன்றத்தின் ஆதரவில் சங்கானையில் இன்றுபிற்பகல் கோலாகலமாக ஆரம்பமாகிறது. சங்கானை அரசடிஆலய முன்றலில் இதற்கென விசேஷமாக அமைக்கப்பெற்ற பந்தலில் ஆரம்பிக்கும் இம்மாநாடு, தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும்.

நாகலிங்க சுவாமிகள் அரங்கில் நடைபெறும் இன்றைய விழாவிற்குகிளிநொச்சி எம். பியும் தமிழ்மறைக் கழகத் தலைவருமானபண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமை தாங்குவார். இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு-

பிற்பகல் 4-00 வழக்கம்பராய் அம்மன் கோவிலடியிலிருந்துதிருக்குறள் ஏட்டுச்சுவடி ஊர்வலம். 5-30 குற

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரதமருக்கு எஸ். ஜே. வி. அவசரத் தந்தி

### பூரண விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

வல்வெட்டித்துறை துப்பாக்கிச் சூட்டில் காலமான இளைஞனின் மரணம் சம்பந்தமாக மாஜிஸ்திரேட் திரு, விக்னராஜா விடுத்த தீர்ப்பு குறித்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்று பிரதமமந்திரிக்கு அனுப்பிய ஒரு அவசரத்தந்திச் செய்தியைத் தொடர்ந்து பிரதம மந்திரி மேற்படி சம்பவம் குறித்து பூரண விசாரணையொன்றை உடனே நடத்தும்படி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையில் நடைபெற்றுள்ள சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கும்படியும் அவசியமானால் ஸ்தலத்துக்கு விஜயம் செய்யும்படியும் பிரதம மந்திரி ஐ ஜி. பிக்கு உத்தரவிட்டுள்ளார்.

## அட்டோர்ணி ஜெனரலுடன் ஐ. ஜி. பி. பேசுவார்

### தீர்ப்பின் நகலை வடமாகாண பொலிஸ் அதிபர் அனுப்பினர்

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறைத் துப்பாகிப்பிரயோக சம்பவம் சம்பந்தமான மாஜிஸ்டிரேட் விசாரணையின் முடிவை உடனே தமக்கு அறியத் தருமாறும், அதன்மீது தாம் அட்டோர்ணி ஜெனரலுடன் கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதாகவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தைக் கேட்டுக்கொண்டார். அதைத் தொடர்ந்து நேற்று மாஜிஸ்டிரேட் அளித்த தீர்ப்பின் வாசகம் உடனடியாக வடமாகாண பொலிஸ் அதிபரால் ஐ. ஜி. பிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கடைசியாகக் கிடைத்த ஒரு தகவல் கூறியது.

## நாத்தாண்டிய தொகுதி வழக்குத் தள்ளுபடி

கொழும்பு, திங்கள்

நாத்தாண்டிய தேர்தல் தொகுதியில் சேர் அல்பர்ட் எம். பீரிஸ் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு இன்று செலவுத் தொகையுடன் தள்ளுபடிசெயயப்பட்டது.

வடபகுதி அசைஸ்

## மூளாய் கொலை வழக்கில் இரு எதிரிகளும் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

பதினறு தினங்களாக நடந்த மூளாய் கொலை வழக்கில் எதிரிகளாகிய தந்தையும் மகனும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி, தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 66-ம்ஆண்டு ஜுலை மாதம் 18-ம் திகதி மூளாயில் சுப்பர் முருகேசு வை, சுப்பர் கணபதியும்,

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**சேவல்கள்:**

ஒரு நாள் 20 சதம், ஒரு மாசம் 90 சதம், இரண்டு மாசம் 2/50 சதம், மூன்று மாசம் 4 ரூபா, நாலுமாசம் 6 ரூபா, ஐந்து மாசம் 8 ரூபா. அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1820

**பேடுகள்:**

ஒருநாள் 2 ரூபா, ஒரு மாசம் 4 ரூபா, இரண்டு மாசம் 6 ரூபா, மூன்று மாசம் 8 ரூபா, நாலு மாசம் 10 ரூபா, ஐந்து மாசம் 15 ரூபா. அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1821

**ராக்ரர்**

ராக்ரர் கட்டுப்பணத்திற்குக் கொடுக்கப்படும். [Armature] ஆமேச்சரும், ரையர், றிம், உவீல், ராக்ரர் பாட்சும் மலிவாகக் கொடுக்கப்படும். அசோக்கா இன்சினியறிங் கோர்ப்பறேசன், உயிலன்குளம், மன்ஞர். 1832

**காணி:**

சுண்டிக்குளி பாங்ஷல் வீதியிலிருக்கும் கிட்டங்கியொன்று விற்பனைக்கு இருக்கிறது. இது பழைய கட்டடம் 27 அறைகளைக் கொண்டிருக்கிறது. வாங்க விரும்புவோர் விபரங்களுக்கு 11, பிறவுன் வீதியிலிருக்கும் அ. நாகலிங்கத்துடன் கடித மூலமோ நேரிலோ தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளலாம். 1837

## விற்பனைக்கு

**காணி:**

ஊர்காவற்றுறை பண்ணைரேட்சந்தியிலுள்ள, அம்பலப்புலம் குறிச்சியில் அடங்கும் ''நெய்க்கொட்டான் தாழ்வு'' என்னும் விசாலமான வளவும், ''செபஸ்தியான் ஸ்ரோர்ஸ்'' என்னும் இரண்டு கடைகளும் கொண்ட 10 பரப்புள்ள காணி விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் கீழ்க் காணும் விலாசத்துடன் நேரடித் தொடர்பு கொள்ளவும். L. விக்ரர், 79, 4-ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். 1838

**கிறைண்டிங் மில்:**

நல்ல நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் 12 கு. பவர் லிஸ்டர் என்ஜினுடன் 10 கு. பவர் கிறைண்டர், கோப்பிக் கிறைண்டர். நியாய விலை. சாந்தி மில் பழங்கிணற்றடி, சமரபாகு, வல்வெட்டித்துறை. 1839

## கல்வி

**வகுப்புகள்**

ஜி. சி. ஈ. கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் சித்தி அடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி 107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்பிரதானவீதி, முள்ளியவளை. 1816

## மானிப்பாய் இந்துக்கல்லூரி

### பிரவேசம்

**ஜி. சி. ஈ. (உயர்தரம்) கணிதம், உயிரியல் (Maths & Biology) வகுப்புகள்**

இவ்வகுப்புகளில் சேரத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 26-5-67 வரையில் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்பத்திரத்தோடு ஜி. சி. ஈ. [சாதாரணதர]ப் பத்திரப் பரீட்சைப் பெறு பேறுகளையும்சேர்த்து அனுப்புதல்வேண்டும்.

அதிபர்,
மா. இ. க

1795

## தேவை

**விற்பனையாளர்**

நாங்கள் தயாரிக்கும் பொருட்களை வீடுவீடாகச் சென்று விற்பனை செய்வதற்கு பெண் விற்பனையாளர் தேவை. விளம்பர இல 1827 ஈழநாடு மே/பா, தபால் பெட்டி இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க. 1827

## WANTED

**Representatives:**

"Wanted Representatives either sex-only educated men and ladies between the ages 30—35 need apply. Attractive Commission: Vadamarachy Area. Apply to The Development officer, F. & G. Co. Ltd., Srinivasa, Puloly West, Point Pedro" 1835

## கல்வி

**வகுப்புகள்**

தபாற்கந்தோர் தலைவர், தந்தியாளர் பரீட்சைக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் பாடம் நடத்தப்படும் காலி இடங்கள் குறைவாயிருப்பதால் உடனே சேருங்கள், முந்திய பரீட்சை முடிவுகள் மிகத்திறமானவை. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் / பிரதானவீதி, முள்ளியவளை. 1836

**வகுப்புகள்:**

ஜீ. சீ. ஈ. உயர்தர/சாதாரணதர கலை/விஞ்ஞான/வர்த்தகம், சிங்களம் ஆகிய வகுப்புகளுக்கு துரித பயிற்சி அனுபவம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களால் நடாத்தப்பெறுகின்றது. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி [Jaffna Tutorial College] கைலாசபிள்ளையார் கோயிலடி நல்லூர், நெல்லியடி, கரவெட்டி. 1822

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### திங்கள் 22 - 5 - 67

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 பாட்டு—சே. ஏ. கனகசபை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச் சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.

## இரதோற்சவம்

சங்கானை, ஞாயிறு சங்கானை இலுப்பைத் தாழ் முருகமூர்த்தி கோயில் இரதோற்சவம் நாளை நடைபெறவிருக்கிறது, பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் பின்னர்பக்திப்பாடல்களும் இடம்பெறும்.

## விளம்பரம்

குறிப்பு: எல். ஏ/1265 1964ம் ஆண்டின் 28ம் இலக்க காணி எடுத்தல் [திருத்தச்] சட்டப்படி திருத்தப்பட்டவாருன காணி எடுத்தற் சட்டத்தின் [அத்தியாயம் 460]

7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1967ஆம்ஆண்டு மே மாதம் 19ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இலக்கம்: 14,749 பகுதி IIIல் பார்க்கவும்.

**அட்டவணை**

காரியாதிகாரியின் பிரிவு: தென்மராட்சி.
கிராமத்தின் பெயர்: பாலாவி.
காணியின் பெயர்: வெள்ளுருவையட்டி.
ஆரம்பபட இல: யா 62.
துண்டு இல: 1.

தி. முருகேசபிள்ளை
உதவி அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

3103
G P

## ஞாபக தோத்திர ஆராதனை

**கனம் கனன் சா. ச. சோமசுந்தரம்**

அவர்களின்

குருத்துவத்தையும், கிறீஸ்தவசீவியத்தையும்பாராட்டி

மருதனுமடம் கிறீஸ்த சேவா ஆச்சிரமத்தில்
1967-ம் ஆண்டு மே மாதம் 25-ந் திகதி
வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு

**ஞாபக தோத்திர ஆராதனை**


நடைபெறும்.

பேச்சாளர்: அதி. வண. எஸ். குலேந்திரன்
சேவாக் எஸ். செல்வரத்தினம்
வண. டி. ரி. நைல்ஸ்

**யாவரும் அன்பாக அழைக்கப்படுகின்றனர்.**

J.C. ஹன்டி,
யாழ். கிறீஸ்தவ ஐக்கிய சங்க சார்பாக
[தலைவர்]

1786

சாளி! நான் கேட்டது இதுவல்ல! ஜின் என்று சொல்லும்போது நான் கேட்பது—

# மெஸ்தியா ஜின்னையே

ஏனென்ருல் . . . . . . ? ?

1. **புதிய மெஸ்தியா ஜின்** இரு முறை வடிக்கப்பட்டது.
2. **புதிய மெஸ்தியா ஜின்** வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. **புதிய மெஸ்தியா ஜின்** மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. **புதிய மெஸ்தியா ஜின்கள்** [கலப்பற்றதும், தோடம்பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. **புதிய மெஸ்தியா ஜின்தான்** 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. **புதிய மெஸ்தியா ஜின்** ரொம்ப ரொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால்தான், மேனை சாளி, நான் ஜின் என்று சொல்லும் போது

## புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயே ரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியா ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிருர். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதை எழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன் **புதிய மெஸ்தியா போட்டி** மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட், 3-வது மாடி, மாக்கான் மரைக்காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதிய மெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப் படவேண்டும். **பன்னிரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.** முதலாவது பரிசு **சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான சீட்டுகள் அனுப்புபவருக்கு சென்னைக்குப் போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு.** ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டிமுடிவு திகதி மே 31, 1967.

# சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

## மெஸ்தியாவுடன் பறந்து செல்லுங்கள்

12 [illegible] பரிசுகள் உண்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியாவில் யுத்த கொந்தளிப்பு

## 'சூயஸ்' நெருக்கடி போன்று நிலைமை முற்றுகிறது'

### அமைதியை நிலைநாட்ட இன்று கெய்ரோ செல்கிறார் யு தாண்ட்

ஐ. நா. (நியுயோர்க்) மே 21

கொந்தளித்துக் கொண்டிருக்கும் மேற்கு ஆசிய நிலைமையை முன்னிட்டு அங்கு அமைதியை நிலைநாட்டும் தீவிர முயற்சியில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் நாளை கெய்ரோவுக்குப் பயணமாகவிருக்கிறார். அவர் கெய்ரோவில் ஐக்கிய அராபியக் குடியரசு ஜனாதிபதி கேர்ணல் நாசரைச் சந்தித்து அமைதியை நிலைநாட்டும் வகையில் பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கிறார்.

#### 'சூயஸ்' போனற நெருக்கடி

தமது கெய்ரோ விஜயம் சம்பந்தமாக யுதாண்ட் ஐ. நா. பந்தோபஸ்து சபையில் 1936-ம் வருடத்தில் ஏற்பட்ட சூயஸ் கால்வாய் நெருக்கடி போன்றதொரு நெருக்கடி நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளதென்றும் [இப்பிரச்னையில் பிரிட்டன், பிரான்ஸ், எகிப்து ஆகிய தேசங்கள் சம்பந்தப்பட்டிருந்தன] பதினொரு வருடங்களின்பின் இப்போது அப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதெனவும் தொடர்ந்து வரிசையான கலவரங்கள் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாகவும் எடுத்துக்கூறினார். இவ்வித நிலை நீடித்தால் ஒரு பெரிய போராக அது உருவெடுக்கலாம் எனவும் அவர் அச்சம் தெரிவித்தார்.

#### அரபு நாடுகளின எச்சரிக்கை

இதற்கிடையே அரபு லீக் சபை தனது எந்த ஓர் உறுப்புநாட்டுக்கெதிராக தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் அதன் பாதுகாப்புக்காக சபையின் உறுப்பு நாடுகள் அனைத்தும் முன்வரும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு ஆசிய எல்லைப் புறத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஐ. நா. அமைதிப்பராமரிப்பு படைகள் உடன் வாபஸ் பெறப்படவேண்டும் என எகிப்தின் கோரிக்கையைத் தொடர்ந்து மேற்படி படைகளை வாபஸ் பெறுமாறு ஐ. நா. தலைமைக் காரியதரிசி உத்தரவிட்டிருந்தார்.

இப்போது இஸ்ரேல் எந்த ஒரு சிறு ஆக்கிரமிப்பில் இறங்கினாலும் அதனுடன் போர் தொடுப்பதற்கு தயாராக எகிப்தியபடைகள் தயாராக ஏராளமான துருப்புக்களையும் தளபாடங்களையும் எல்லைகளில்குவித்து வைத்துள்ளது

'சிரியா மீது இஸ்ரேல் நடத்தும் எந்த ஆக்கிரமிப்புக்கும் எகிப்து உடன் கடும் பதில் அடி கொடுக்கும்' என ஐக்கிய அராபியக் குடியரசு படைத் தளபதிகள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.



#### சவானசந்தித்தார்

ஆசாம், மே 21

ஆசாம் ராஜ்ய சீரமைப்பு சம்பந்தமாக ஆராய்வதற்கு இங்கு விஜயம் செய்த உள்துறை மந்திரி திரு. சவான் ஆசாம் ராஜ்ய தலைவர்களையும், ஆசாம் மந்திரி சபை அங்கத்தவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

#### புதிய நிர்வாகிகள்

அல்வாய், ஞாயிறு

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர் திரு.வே. த. தணிகாசலம், உபதலைவர்- திரு. க. பாக்கியராசன். செயலாளர்கள்- திருவாளர்கள்- மா. சின்னராசா, மா. அனந்தராசா. பொருளாளர்-திரு. மு. செ. விவேகானந்தன், விளையாட்டுத்தலைவர்- திரு. ம. சிவகுருநாதன். கணக்குப்பரிசோதகர் -திரு. க. பரமானந்தன். நாடகச் செயலாளர்கள்- திரு. தா. வீரசிங்கம், திரு. த. சத்தியநாதன். நிலையப்பொறுப்பாளர் -திரு. செ. வீரராஜா, திரு. செ. செல்வலிங்கம். அங்கத்தவர்கள்- திரு. மு. வைத்திலிங்கம், திரு. மூ. நாகமுத்து, திரு. பெ. சபாபதிப்பிள்ளை, திரு. ம. கணேசலிங்கம்.

ஃ ஃ ஃ

உடுவில், ஞாயிறு

உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. எஸ். கணேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டமுடிவில் பின்வருவோர் புதிய நிர்புாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. எஸ். கணேசன். உபதலைவர்- திரு. பி. கே. நாதன். செயலாளர் திரு. எஸ். ஆனந்தராஜா. உபசெயலாளர்- திரு. சி. கணேசரத்தினம். தனாதிகாரி- திரு. வ. கிருஷ்ணபிள்ளை. அங்கத்தவர்கள்- திரு. எஸ். சிவராசா, திரு. சி. சிவகுரு, திரு. எஸ். மகேசன், திரு. பி. நித்தியானந்தன், திரு. பவானந்தன், திரு. வேசணமுகம்.

## மா எதிர்ப்பாளர் கையில் சீனாவின் முக்கிய நகரம்

பீகிங், மே 21

சீனாவின் முக்கியநகரமான கீசியை மா எதிர்ப்பாளர்கள் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மா-சே-துங்கின் எதிர்ப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் பலத்த ஆள்சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மா எதிர்ப்பாளர்கள் பிராந்திய ராணுவத்தினரின் உதவியுடனேயே இந்த நகரத்தைக் கைப்பற்றினர்களாம்.

#### சங்க அங்குரார்ப்பணம்

உரும்பராய், ஞாயிறு

''அடிக்கடி ஏற்படும் சிறு சிறு தேவைகளுக்கெல்லாம் நாம் அரசாங்கத்தை எதிர்பாராமல் பெற்றோர் ஆசிரியசங்கமூலம் தீர்த்துவைப்பதன்மூலம் அரசாங்கத்துக்கும் எமக்கும் அதிக நெருக்கம் ஏற்படும்'' என்று ஊரெழு கணேஷவித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய சங்கத்தலைவியும், தலைமையாசிரியையுமான திருமதி சோ. த. இராணிநாயகம் கூறினார். பிள்ளைகளை நேரத்திற்குப் பாடசாலைக்கு அனுப்புதல், அவர்களின் சுகாதாரம், காலைமாலைக்கல்வி என்பவற்றில் பெற்றோர் அதிக கவனமெடுக்கவேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினர்.

சங்க உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திருமதி சோ. த. இராணிநாயகம், காரியதரிசி: ச. குலோத்துங்கமுதலியார், தனாதிகாரி; மு. வீரசிங்கம், ஆறு பேரைக் கொண்ட செயற்குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

#### விவசாயம படித்தும பயனில்லை

யாழ்ப்பாணம், திகங்ள்

'சகல பாடசாலைகளிலும் விவசாய பாடத்தைக் கட்டாயபாடமாகக் கற்பிக்க அரசாங்கம் முன்வந்திருக்கும் இந்த நேரத்தில் அப்பதவிக்குத் தகுதியான விவசாய டிப்ளோமா பயிற்சி பெற்று வேலை இல்லாதுஇருப்பவர்களுக்கு இன்னமும் நியமனம் கொடுக்காதது வருந்தத்தக்கதாகும்.'

மேற்கண்டவாறு பேராதனை பண்டகசாலை விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் விவசாய டிப்ளோமா பட்டம் பெற்று வெளியேறிய மாணவர் சங்கத்[தலைவர்] விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கை தமிழ் எம். பிக்கள் [illegible] அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## ''தனது மகிழ்வற்ற வாழ்வு பற்றி விசாலாட்சி என்னிடம் கூறினர்''

### கார்த்திகைக்காய் மூக்கொலை வழக்கில் சாட்சியம

காங்கேசன்துறை, ஞாயிறு

''என்னை எவரும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. என்ன மாதிரி விசாரணை நடத்துகிறார்கள் என்று பார்க்க பொலிசிற்குச் சென்றேன். இது பற்றி அயலவர்களை விசாரணை செய்வதாகக் கேள்விப்பட்டேன். பொலிஸில் சென்று நானும் வாக்கு மூலம் கொடுத்தேன்'' என்று வட்டுக்கோட்டை 'கார்த்திகைக் காய்' மூக்கொலை வழக்குநேற்றுமல்லாகம்நீதிபதி திரு. டி. எஸ் நிற்சிங்கா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது அயலவரான தம்பிப்பிள்ளை கந்தசாமி சாட்சியமளிக்கையில் கூறினர்.

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்தவர்களான சரஸ்வதி தியாகராசா [மந்திரவாதி], இராமசாமி காசிப்பிள்ளை [இறந்தபிள்ளைகளின் தந்தை] ஆகிய இருவரும் சென்ற நவம்பர் 28-ம் திகதி காசிப்பிள்ளையின் பிள்ளைகளான பாக்கியலட்சுமி [வயது5], இராசேந்திரம் [வயது8], வைரவநாதன் [வரது 3] ஆகிய மூவரையும் நஞ்சூட்டிக் கொலை செய்ய முயன்றதாக அதே நேரத்தில்காசிப்பிள்ளையின் மனைவி விசாலாட்சி, மகள் சரோஜினி ஆகிய இருவரையும் நஞ்சூட்டிக்கொலை செய்ய முயன்றதாகவும் சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். சங்கானைப் பொலிசார் வழக்கை நடத்தினர். இவ் வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்கு நேற்று மல்லாகம் மாஜிஸ்திரேட்கோர்ட்டில் பெரும் ஜனக்கூட்டம் காணப்பட்டது.

தம்பிப்பிள்ளை கந்தசாமி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது.

''இரண்டாவது எதிரியான இராமசாமி காசிப்பிள்ளையின் மூன்று குழந்தைகளும் இறந்த நாள் எனக்கு ஞாபகம். பிள்ளைகள் இறந்து நாலைந்து நாட்களின் பின் சங்கானைப் பொலிஸிற்கு நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னை எவரும் பொலிஸிற்கு அழைத்துச் செல்லவில்லை. அயலவர்களை விசாரணை செய்வதாகக் கேள்விப்பட்டேன். பொலிஸிற்கு நானே சென்று வாக்குமூலம் கொடுத்தேன். என்னை முதலாம் எதிரியான மந்திரவாதி 1,500 ரூபாவிற்கு ஏமாற்றியதன் மூலம் என்னை வறுமைக்கு ஆளாக்கிவிட்டார். இரண்டாவது எதிரி எனது ஒன்றுவிட்ட சகோதரன். அத்துடன் நண்பனும்கூட. இரண்டாவது எதிரியுடன் முதலாவது எதிரி சேருமுன் நான் முதலாவது எதிரியுடன் சிநேகிதத்தை விட்டுவிட்டேன். இரண்டாவது எதிரியுடன் தொழில் முறையில் மட்டும் சிநேகிதம். தேவையின்றி அவரது வீட்டிற்குப் போவதில்லை. முதலாவது எதிரி இரண்டாவது எதிரியின் வீட்டிற்குப் போகத் தொடங்கியதும் நான் இரண்டாவது எதிரியின் வீட்டிற்குப் போவதை விட்டேன். முதலாவது எதிரியுடன் நான் சேர்ந்து திரியும்பொழுது இரண்டாவது எதிரி அவருடன் சேரவேண்டாமென்று எனக்குக் கூறினர். இரண்டாவது எதிரி முதலாவது எதிரியுடன் சேர்ந்து திரியும்பொழுது நான் சேரவேண்டாமென்று சொல்லவில்லை.

முதலாவது எதிரிக்கு வாளால் வெட்டியதாகச் சீனிராசாவிற்கும் சோமசுந்

[7-ம் பக்கம் பார்க்க]

## 'தமிழர் கலை வளர்ச்சியை அரசாங்கம் தடைசெய்கிறதாம்'

அளவெட்டி, சனி

வழமைபோல இந்தியக் கலைஞர்கள் இலங்கைக்கு வந்து கலைச் சேவைசெய்ய அரசாங்கம் இவ் வருடம் அனுமதி அளியாததையிட்டு அகில இலங்கை இசையாளர் சங்கம் தனது அறிக்கையில் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

''இலங்கை ஒருசிறியதீவு. இதன் கலைவளர்ச்சிக்கு இந்தியா போன்ற கலை விருத்தியடைந்த நாட்டின் தொடர்பு இன்றியமையாதது. இந்தியக் கலைஞர்களின் இலங்கை வருகையையும், இறக்குமதி செய்யப்படும் இசைக்கருவிகளையும் அரசாங்கம் தடைசெய்வதால் தமிழ் மக்களின் கலை வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படுகின்றது. அத்துடன் நல்ல இசைக் கருவிகளையும் உற்பத்தி செய்ய அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாததையிட்டும் இசையாளர் சங்கம் வருத்தமடைகின்றது'' என்றும் கூறும் அறிக்கை இலங்கை இந்திய கலைத் தொடர்புகளைச் சிதைக்கமுன்வந்துள்ளசில அரசியல்கட்சிகளையும் சங்கங்களையும் கண்டிக்கிறது-

இறைவன் திருமேனியில்
சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்.
சுந்தரம் பிறதர்ஸ்
கோவில் அபிஷேகப்பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
(புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கற்று, அறிந்து அடங்கி நடத்தலே மாந்தர்கடமை. இடம்பமும், ஆரவாரமும், பகட்டும், மினுக்கும், வாய் நீளமும் வாழ்வைக் கெடுக்கும். அடக்கமே ஆக்கம். அடக்கம் அமரருடன்சேர்க்கும். அடங்காமை ஒருவனைக் கொடிய இருளில்வீழ்த்தும்.

—குறள்விளக்கம்

ஈழநாடு
Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஆண்டு
வைகாசி 8 ம் உ. (22-5-67)

## புனிததினம்

வையத்தில் வாழ்வாங்கு வாழவகை சொன்னவள்ளுவனுக்கும் உலகில் பசி, பிணி, மூப்பு ஆகியதுன்பங்களை ஒழிக்க வழிகண்ட புத்தபிரானுக்கும் இலங்கை மக்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள்; விழா எடுக்கிறார்கள். இலங்கை மக்கள் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் வாழும் மக்கள் இத்தினங்களைப் புனிதமுடன் கொண்டாடுகின்றனர்.

வள்ளுவனும் புத்தர் பிரானும் அவதரித்தது பாரத பூமியில்தான். என்றாலும் அவர்கள் ஒருசிலருக்கோ ஒருசில நாடுகளுக்கோ உரியவர்களல்லர். உலகமனைத்துக்கும் அவர்கள் சொந்தம். ஆண்டுக்கொருதடவை விழா வெடுத்தாலும், மலர்தூவி அஞ்சலி செய்தாலும் போதாது. அவர்கள் கூறியபோதனைகளை, அவர்கள் காட்டிய வழியை ஓரளவாவதுகடைப்பிடித்தால்தனிமனிதவாழ்வில், சமூகத்தில், நாட்டில், உலகில் நிரந்தர அமைதிநிலவும்; வாழ்வு இன்பம் பெறும். அரசபோகத்தையே உதறித்தள்ளிய புத்தபிரானின்போதனைகளைப்பின்பற்றுவதாகவும், புத்தர் வழியையே பின்பற்றுவதாகவும் கூறிக்கொள்ளும் நாம் ஆட்சிப் பீடத்திலமர்வதற்காகவும் அரசியல் ஆதிக்கத்திற்காகவும் எத்தனை போட்டி; எத்தனை பிரச்னைகள். மக்கள் எல்லோரையும் சமமாக மதிக்கவும் எல்லோர்மீதும் அன்பும் கருணையும் காட்டும்படியும் கூறிய அப்பெரியார்களுக்கு விழா எடுத்தாலும், அஞ்சலி செலுத்தினாலும் போதுமா? இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின்பெயரால் எத்தனை சர்ச்சைகள், தகராறுகள்? நாம் நமக்குள்ள வேறுபாடுகள், போட்டி, பொறாமைகளை நீக்கி புத்தரும், வள்ளுவரும் காட்டியவழியை ஓரளவாவது பின்பற்றி வாழ்ந்தால் உலகம் நம்மைப்பார்த்து திருந்தும்; உலகில் நிரந்தர அமைதியும் ஏற்படவழிபிறக்கும்.

# திரு. செல்வநாயகத்தின் அரசியல் ஞானம்

## 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பாராட்டு

[''இலங்கைத் தமிழர்'' என்ற தலைப்பில் இந்தியாவின் ஆறு மாகாணங்களிலிருந்து ஒரேநேரத்தில் வெளியாகும் பிரபல ஆங்கில தினசரியான ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' எழுதியுள்ள தலையங்கத்தின் தமிழாக்கம் இது.]

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு தற்பொழுது மிகவும் கஷ்டமான காலமாகும். நாடற்ற பிரஜைகளெனக்கருதப்படும் இந்திய வம்சாவழியினரின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக கொண்டுவரப்பட்ட மசோதா பல மாறுபட்ட கருத்துக்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் வழிவகுத்துள்ளது. இந்த மசோதாவைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுமல் செய்வதற்காக மல்வத்தை மகாநாயக தேரோ, திரு. ஆர். ஜீ. சேனநாயகா, திருமதி பண்டாரநாயகா போன்ற சிங்களத் தலைவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு பகீரதப் பிரயத்தனம் செய்துவருகின்றனர். இச்சூழ்நிலையில்தான் தமிழரசுக்கட்சியும் தேசிய அரசாங்கத்தில் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன்மோதிக்கொண்டு வருகின்றது.


தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. செல்வநயகம் அரசாங்கத்தை தற்பொழுது விட்டுவிலகப்போவதில்லை யென தனது கட்சியினருக்கு கூறியிருப்பது சூழ்நிலை சுமுகமாயிருப்பதற்கு நல்ல அறிகுறியாகும். ஐக்கிய தேசியக்கட்சியுடன் தமிழர்கள் சண்டையிடுவதற்கு இன்றைய சூழ்நிலை உகந்ததல்லவென்றும் அக்கட்சியின்விவகாரங்களை நன்ருக ஆராயக்கூடிய அநேக சிங்களத் தலைவர்கள் உள்ளனரென்றும் திரு. செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளார். தமிழர்கள் இதுசம்பந்தமாக எதிர்ப்பு [illegible] சில காரணங்களிருக்கலாம்.

கச்சேரி முறையை மாற்றி மாவட்டசபை முறையை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமென்று தமிழரசுக்கட்சியினர் கூறிவந்தனர். இதனை பிரதமர் மறுத்துமல்லாமல் அப்படியொன்றுமில்லையென்று கூறி அவ்விவகாரத்துக்கு முற்றுப் புள்ளிவைத்து விட்டார். இதன்காரணமாக அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சி விலகவேண்டுமென்று பல அங்கத்தவர்கள் கோரியிருந்தனர்.

மாவட்டசபைகள் உள்ளுராட்சிமன்ற நிலையில் ஆறுதலையும் — தற்பொழுது எதிர்நோக்கியுள்ள சிங்கள குடியேற்றத்தையும்ஓர் அளவிற்கு தீர்த்துவிடுமென தமிழ்மக்கள் பெருமளவிற்கு [illegible] தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ, பொன்னம்பலம் இம்மாவட்டசபை விவகாரத்தை எதிர்த்துவருகின்ருர். இந்நிலையில் சிங்கள அரசியல்வாதிகள் சிலர் இம்மாவட்டசபைகளுக்கு தவருன விளக்கம் கொடுத்து நாட்டை இரண்டாக சிங்களவர்- தமிழர் என்ற முறையில் பிரிக்கும் இம்மசோதா எனக் கூறி வருகின்றனர். ஆகையால் பிரதமர் எச்சரிக்கையாக நடந்துகொண்டதில் ஆச்சரியமில்லை. பிரதமர் இன்றைய சூழ்நிலையில் பல அமுக்கங்களுக்கு ஆளாகியுள்ளதினுல் பெரும்பான்மையினரான சிங்கள மக்களின்பிரச்னைகளை கவனத்தில் கொள்ளாமல் இருக்கமுடியாது.

தமிழ்மக்களைஎதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை பொறுமையால்தான் பெறவேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளதுடன் தமிழர்கள் இன்று ஒரு நெருக்கடியான கட்டத்தில் இருக்கிருர்கள் என்றும் திரு. செல்வநாயகம் கூறியிருக்கிருர். அவரின்அரசியல் ஞானத்தையே [illegible]கின்றது.

இப்பொழுது நீங்கள் விரும்பும் இடத்தில்
வெற்றிகரமாக பயிர்செய்யலாம் எஸ்-லொன்
குழாய் நீரைக் கொணர்ந்து தரும்.




இன்று விவசாயத்துறையில் உலகமெங்கும் எஸ்-லொன் குழாய் முழுக்க முழுக்க உபயோகிக்கப்பட்டு வருகிறது


ஏற்ற இறக்க இடங்களுக்கு நீர்ப்பாய்ச்சுதல், சிதறித் தெளிக்கும் சேவைகள், உரப்பதார்த்தங்களை குழாய் மூலம் அனுப்புதல், கிருமி நாசினிகள் தெளித்தல், இன்னும் பல கனக்குறைவான, சுலபமாகப் பொருத்தும் குழாய்ப் பிரயோகங்களுக்கு எஸ்-லொன் மிகப் பொருத்தமானதாக விளங்குகின்றது அதன் பலமும், நீடியகால பாவிப்பும், கால வேறுபாட்டால் மாறுபடாத் தன்மையும் சேர்ந்து அதை விவசாயிகளின் முதல் தெரிவாக்குகின்றது


இறமையான இலவச தொழில்நுட்ப சேவைக்கு கலந்தாலோசிக்கவும்.

எஸ்-லொன் பி. வி. ஸி.
குழாய்களையே பாவியுங்கள்,
அவை உத்தரவாதமுடையவை.

மகாராஜா ஒகனைஷேசன் லிமிட்டெட், பாங்ஷால் வீதி, கொழும்பு 11. டெலிபோன்: 3603, 3634.
ராஜேந்திரம்ஸ் லிமிடெட்டின் வாரிசுகள்.


தண்ணீர்ச் சேவை,


மின் காவு குழாய்,


மழை நீர்க் குழாய்கள்,
கீழ்த் தரைக் குழாய்கள்

AJNS

எஸ்-லோன் பி. வி. ஸி. குழாய்களையே பாவியுங்கள், அவை உத்தரவாதமுடையவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# திருக்குறள் மாநாடு

## சிறப்பிதழ்




விலை சதம் =/40

அருணு ஏஜென்ஸீஸ்
அளவெட்டி.

பதிவுசெய்து, நான்குகிழமையில்
குஞ்சுகள் அனுப்பப்படும்.




# - அறிவாளரோடு பகைக்காதீர் -

- மு. சிவானந்தம் எம். ஏ. -

[செயலாளர், சங்கானை இந்து வாலிபர் மன்றம்]

நாட்டிலே நாம் பலரோடு வாழ்கிறோம். அன்பு செலுத்திவாழ்வதால் அமைதி காண்கிறோம். ஒரு சிலர் தீய வழிச்சென்று நம்மையும் அவ்வழிக்கு அழைப்பார்கள். அறிவுடைமை தடுக்கும் அவர் வழிச் செல்லவில்லையானால் கருத்துவேறுபாடு தொடங்கும். பின்னர் அதுபகையாக மாறும்.

இயன்றவரை பகையின்றி வாழவே முயலவேண்டும்.

[6-ம் பக்கம் பார்க்க]

# ★ உயர் அறம் காட்டிய உத்தமன் ★

(வ. பொன்னம்பலம் எம். ஏ. அதிபர், வித்தியானந்த கல்லூரி, முள்ளியவளை)

தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய பெருமதிப்பிற்குரிய இரு புலவர்களுள் ஒருவர் வள்ளுவன். மற்றையவர் பாரதி. தமிழ் மக்களின் பண்டைய கலைப் பொக்கிஷங்களின் உயர் பீடமாக விளங்குகின்றார் வள்ளுவர். தமிழ் மக்களை பண்டைய பின்னணியில் நவீன உலகோர் ஆக்க உழைத்தவர் பாரதி. தமிழகத்தின் இரு கண்களாக விளங்கும் இவ்விரு பெரியார்களும் உலகுள்ளவரை நிலைத்திருப்பது திண்ணம்.

புகழொடு தோன்றி அமரத்துவம் பெற்ற புலவர் வரிசையில் வள்ளுவன் நாமம் முன்னிற்கின்றது. தமிழகத்தில் அநீதியும், அதர்மமும் நிலவக் கூடாது, தர்மத்தின் அடிப்படையில் ஒரு புதிய அரசு, மக்கள் சமூகம், புதிய உறவுமுறை, புதிய கணிப்பு இவற்றைக் காணவேண்டும் என்று விழைந்த பெருமகன் திருவள்ளுவரே. புலவர் மரபில் தன்னுடைய குலதெய்வம் தன்னைக் காத்து நிற்கும் அரசன், அவனின் வீரம், அவனது படையின் சிறப்பு, அவனது தலைப்பட்டினத்தின் எழில் பற்றிப் பாடிய இலக்கியங்களே தமிழகதில் மலிந்து காணப்படுகின்றன. இதற்கு ஓர் புறநடையாக பொது மறையாம் திருக்குறள் அமைகிறது. இறைவழிபாட்டுடன் குறள் பாடப்பட்ட போதிலும் அவன் வணங்கிய தெய்வம், ''ஊரிலான், குணம்குறி இலான், பேரிலான்'' என்ற நிலையில் இறைமையை அன்பாக்கி, அறமாக்கிக் கண்ட பெருமை வள்ளுவனுக்கே உண்டு. வள்ளுவன் சமய பேதங்கள் கடந்த சமரசக் குன்று.

வள்ளுவனுடைய ''வேதத்தில்'' 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற சமுதாய சமத்துவம் தொனிக்கின்றது. கிறித்தவனும், இஸ்லாமியனும், பௌத்தனும், சமணனும், சைவனும்வைஷ்ணவனும் ''வள்ளுவன் நம்மவன்'' என்று கொண்டாட தக்கதாக தத்துவம் தந்து மனிதவர்க்கத்தின் சிறுமதி முத்திரை எதுவும் பொறிக்கப்படாத முது பெரும் புலவனாக மக்களை நேசித்து, மனிதாபிமானத்தை வளர்த்து, தர்க்க இயலைத் தத்துவத்திற் சேர்த்து வடித்துத் தந்த உயர் அறம் காட்டிய உத்தமன் வள்ளுவன்.

1330 அரும் குறள்கள் அறம், பொருள், இன்பம் ஆக வகுக்கப்பட்ட விதம் குறிப்பிடத்தக்கது. 380 குறள்கள் அறத்திற்கும், 250 குறள்கள் இன்பத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ''அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை'' என்று பாடும் வள்ளுவன் ''பொருள் இல்லார்க்கு இவ்வுலகம்இல்லை'' என்ற அடிப்படை உண்மையைத் தாமேற்று நாமுணரக்கூடியதாக, பொருட்பாலுக்கு 700 குறள்களை ஒதுக்கியுள்ளான். அருள் நெறி வளர்த்து வாழ்வில் இன்பம் காண பொருள் முக்கியத்துவமும், முதன்மையும் வாய்ந்தது என்ற அடிப்படைத் தத்துவம் குறளுடன் ஒன்றி விளங்குகின்றது. தமிழ்ப் புலவர் மரபில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் வற்புறுத்தி வருகின்ற நிலையினைக் காண்கின்றோம். ஆனால் ''குறள் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்'' என்ற சைவத்தின் குரல் ஒலிக்கின்றது. ''வானகம் இந்த மண்ணினில் தென்பட வேண்டும்'' என்ற பாரதியின் கூற்றில் உள்ள தத்துவத்தின் விடிவெள்ளியாக விளங்கியவன் வள்ளுவனே. ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்''வதன் அவசியத்தை வற்புறுத்தி நிற்கும் குறள் ''வானுறையும் தெய்வத்துள்'' மனிதன் வைக்கப்படுகின்ற நிலையை உறுதிப்படுத்துகின்

[6-ம் பக்கம் பார்க்க]


க. பொ. த. (சாதாரணதர) வகுப்பு 1967—68

## தமிழ் இலக்கிய விளக்கம்

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான
திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) எழுதியது.

சுவை நிறைந்த உரைநடையும், மாணவர் விரும்பிக் கற்கும் வகையிலமைந்த நயங்களும், இலக்கணக் குறிப்புகளும், கட்டுரையாசிரியர்களைப் பற்றிய விபரங்களும் இந்நூலில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இது ஒரு 'வரதர் வெளியீடு'

பிரதம விற்பனையாளர்: ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


## திருக்கேதீஸ்வர முயற்சிகள்

சிவமணி

சேர் கந்தையா வைத்தியநாதன்

[தோற்றம்: 23-7-1896 — மறைவு: 27-8-1965]

ஆரம்பித்து வைத்த ஆக்கப்பணிகளும்

பொதுச் சேவை தாபனங்களும்

- திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி
- குருகுலம் வேதாகம பாடசாலை
- திருக்கேதீஸ்வரம் கிராமப் புனருத்தாரணம்
- பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் அவற்றின் கிளைகளும்
- நெசவு
- பெற்றேல் நிலையம்
- உழவு யந்திரம் - உதிரிப்பாகங்கள் விற்பனை - நிலையம் (பிரவுண் கொம்பனி-சப் ஏஜண்டுகள்)
- ரொட்டித் தொழிற்சாலை
- மத்திய நூல்நிலையம்
- கௌரியம்பாள் பாடசாலை
- அநாதைப் பிள்ளைகள் இல்லம்
- மாந்தை மேற்கு கிராமசபை

## திருக்கேதீச்சரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(Thiruketheswaram Multipurpose Co-operative Society Ltd.)

காலஞ் சென்ற
சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால்
6-9-61-ல் தோற்றுவிக்கப்பட்ட முயற்சிகள்

★ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

★ அரிசி ஆலை

★ பெற்றேல் செட் (மன்னார்)

1965-ம் ஆண்டில் நடைபெற்ற கூட்டுறவாளர் தினவிழாவில் திருக்கேதீச்சரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதலாவது இடத்தைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாளரோடு பகைக்காதீர்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

எம்மைமீறிப்பகைவந்துவிட்டால் என்செய்வது? முட்செடிசிறிதாயிருக்கும்போது வெட்டி அளிப்பது எளிது. வளர்ந்துவிட்டாலோ கூரிய முட்களின் கொடுமைக்கு ஆளாகவேண்டும். அதுபோலப் பகை முதிரும் முன்னம் வென்று அழிக்கவேண்டும்என்பது வள்ளுவர் கருத்து.

அழிக்கமுடியாத பகையும் உண்டு. அது எது? அறிவாளர்பகை. வாள்கொண்டு தாக்குபவனை வாள்கொண்டு தாக்கலாம். பலர் துணைகொண்டுதாக்கலாம். பதுங்கியிருந்து இராமர் வாலியைத் தாக்கியது போலத் தாக்கலாம். வாளேந்தும் கைவண்ணம் நம்மிடம் இல்லையாயின் கால்வண்ணம் காட்டி ஓடிப்பதுங்கலாம். எப்படியோ, பகையை ஒழிக்கமுடியாவிடினும், பகைவனிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம். பகைநாட்டவர் படைஎடுத்து வந்தால் போர்முரசுகொட்டி எதிர்த்துப்போரிடலாம். வலிமை போதவில்லையானல் நட்பு நாடுகளைத் துணைக்கழைக்கலாம்.

ஆனால் அறிஞர் பகையோ வெல்லமுடியாதது. அவர் வெகுளிகணமேயும் காக்க முடியாதது எண்ணங்களை உருவாக்குபவர்கள் அறிஞர்கள்; வளர்ப்பவர்கள் அறிஞர்கள்; செயலாக்குபவர்கள் அறிஞர்கள். தமது அறிவுக் கூர்மையினுலும் சொல்வன்மையினுலும் மக்கள் உள்ளத்தை உழுது, தமது கருத்துக்களைத் தூவி விடுவார்கள். அக்கருத்துக்கள் முளைத்து, வளர்ந்து. மலர்ந்து செயலாகும்போது எந்தச் சக்தியாலும் எதிர்த்து நிற்கமுடியாது. சொற்கள் என்னும் ஏரினல் உள்ளத்தைத்தாக்கி வெல்லவல்ல அறிஞரைச் சொல்லேர் உழவர் என்கிருர்வள்ளுவர். வில்லை ஏராகக்கொண்டு பகைவரைத் தாக்கும் போர் வீரரைப் பகைக்கலாம். ஆனல் சொல்லேர் உழவர்களை மன்னரோ மற்றவர்களோ பகைத்தால்என்றும் ஆபத்தாகவேமுடியும்.

''வில்லேர் உழவர் பகை
கொளினும்கொள்ளற்க
சொல்லேர்உழவர்பகை''
]873]

பிரெஞ்சுநாட்டின் லூயி மன்னன் நாட்டுமக்களின் நலத்தைப்பேணுது தன் வளத்தை நாடினுன். அங்குள்ள தொழிலாளரும் விவசாயிகளும் அடிமைப்பட்டு அல்லற்பட்டு உழைத்து உருக்குலைந்து போனுர்கள். மதகுருமாரும், பிரபுக்களும் மன்னனுமாக உழைப்பாளர்களின் உழைப்பை உறிஞ்சினுர்கள். ரூசோ, வால்டேர், மொன்டெஸ்கியூ முதலிய அறிஞர்கள் விடுதலைக் கருத்துக்களை - புரட்சிச்சிந்தனையை தங்கள் கதைகள் கட்டுரைகள், நாடகங்கள் மூலம் பரப்பினுர்கள். முடிவு? சிந்தனை செயலானது. புரட்சி மன்னனின் மணிமுடியைப் பறித்தது. இதேபோல் அறிஞர்களின் கருத்துப்புரட்சியால் முடிசாய்ந்தமன்னர்கள் பலப்பலர்.

ஆள்வோர்தமதுஅதிகாரத்தினுல் இந்த அறிஞர்களைச் சிறைக்கூடத்திற் தள்ளிப் பேசவிடாதோ, எழுதவிடாதோ தடுக்கலாம் என எண்ணிஞல் ஏமாந்தே போவார்கள். இந்திய விடுதலைக்கிளர்ச்சியின் போது சோர்வற்ற சொலல் வல்லாரைச் சிறையில் தள்ளினுர்கள். மகாத்மாகாந்தி, நேரு முதலிய தலைவர்கள்எத்தனை முறை சிறைசென்ருர்கள். ஆங்கிலஆட்சியாளரின் அடக்குமுறைக்குத்தப்பி, பிரெஞ்சுக்காரரின் ஆட்சிக்குட்பட்டபுதுச்சேரிக்கு ஓடினர். ஆங்கில ஒற்றர்களின் இன்னல் அங்கும் தொடர்ந்தது. கார்ல் மாக்ஸ் நாட்டுக்கு நாடுதுரத்தப்பட்டார். எனினும் இவர்கள் சிந்தனைகள் நாடெங்கும் பரவின; செயலாகின.

ஜனநாயகநாடுகளில் ஆட்சியை அமைக்கவும் கவிழ்க்கவும் இந்தச் சொல்லேர் உழவரால் முடியும். எனவேதான் ஆட்சிக்குவரும் அத்தனைபேரும் பத்திரிகையாளரை அழைத்து, விருந்து வைத்து தமது கருத்துக்களுக்கும் செயல்களுக்கும் விளக்கம் தருகின்ருர்கள். அண்மையில் ஆட்சிக்குவந்த அயல்நாட்டரசாங்கம்ஒன்று பலமுள்ள பத்திரிகையொன்றின் தலைவருக்கே பெரும் பதவியினை வழங்கியது ஏன்? அந்தஆட்சித்தலைவரும் அவருடன் சேர்ந்தவர்களும் திருக்குறளைப் படித்தவர்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன்பே திருவள்ளுவர்காட்டிய கருத்துக்கள் இன்றும் மெய்யாகின்றன; இனியும்மெய்யாகும்.

# உயர் அறம்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

றது. ''வீடு'' பற்றி வள்ளுவன் கூறுவதற்கு அவனிடம தமிழோ, புலமையோ இல்லாமலல்ல. அதன் அடிப்படைக் காரணத்தை உரையாசிரியர் பரிமேலழகர் கூறும்போது, ''வீட்டைச் சென்று கண்டுகொண்டோர் திரும்பி வந்தது கிடையாது'' என்றும் தான் சென்று காணுத தொன்றைப் பற்றி வள்ளுவன் கூற விரும்பாததே வள்ளுவன் வீடு பற்றிச் சொல்லாததின் அடிப்படைக் காரணம் என்றும் விளக்கவுரை கூறுகின்ருர்.

வள்ளுவன் காண விரும்பிய மனிதசமுதாயம் பெயரிட்ட ஒரு நாடாக அமையவில்லை. தான் காண விரும்பிய உயர்ந்த சமுதாயத்தைக் கம்பன், இராமராச்சியமாக அயோத்திமாநகரில் கண்டான். ஆனல் வள்ளுவன் காணவிரும்பிய இலட்சிய அரசில் ''மக்கட்கு முறை செய்து காக்கும் மன்னவன் - இறை'' என்ற உயர் நிலையைப் பெற்று விளங்குகின்ருன். வள்ளுவனின் பெயரிடாத புதிய நாடு ''உறுபசி, ஓவாப்பிணி செருபகை சேரா'' தபுதுமை நாடித்திகழும். மொழிப்பற்று, நாட்டுப்பற்று, தனித்

[7-ம் பக்கம் பார்க்க]

# வள்ளுவனும் —
# — மகிழ்ச்சி கொள்வான்

(காரை. செ, சுந்தரம்பிள்ளை)

முப்பாலை ஈந்ததமிழ் முனிவன்; காலம்
மூன்றிற்கு மேற்றபொரு ளாய்ந்து சொன்னேன்
எப்பாவ லர்க்குமுயர் வேந்தன்; ஞாலம்
இருக்கும்வ ரைதமிழர்க் குயர்வு தந்தோன்
செப்பாத பொருளில்லை யென்று நல்லோர்
தினமேத்தும் குறளாரம் கோத்து வைத்தோன்
இப்பாரு ளோர்க்குவழி காட்டு கின்ற
இனியதமிழ் மறைதந்தோன் நாமம் வாழ்க.

அறமாய்ந்து பொருளாய்ந்து இன்ப மாய்ந்து
அதனலே வீடுபெறு கின்ற மார்க்கம்
திறமாக நுவல்கின்ற செம்மை மிக்க
திருமறையைத் தந்தஅரும் சிறப்பி னலே
துறைபோகக் கற்றபே ரறிஞ ரெல்லாம்
தூயோர்க்குள் தூயனிப் பெரியா ரென்றே
அறைகின்ருர் விழாக்காணும் மேடைதோறும்
அழகுதமிழ் வள்ளுவன்பேர் இனிது வாழ்க,

இப்புவியோர் ஆற்றுகின்ற அறங்க ளுள்ளே
இல்லறத்தைப் போற்சிறந்த தில்லை யென்றே
செப்புகிருன் அறவியலில்; சிறந்த வாழ்க்கைச்
சேயிழையே தெய்வமெனக் கூறு கின்ருன்
ஒப்புடனே தவமாற்று கின்ற பேரால்
உலகுபய னடைவதில்லை உணர்ந்து பார்த்தால்
எப்போதும் இல்வாழ்வான் தயவை யன்றோ
எதிர்பார்த்து வாழ்கின்ற துலக மம்மா.

பொருளியலை ஆய்கின்ற புலவன் பூமி
புரக்கின்ருேன் இலக்கணத்தைப் புகன்று பின்னர்
வருவதுரைக் கின்றமந் திரிமார் தன்மை
வரிசையாய்ச் சொல்லிவளம் பெருக்க வேற்ற
கருவிகளைக் கண்ணியத்தை கடமை யாவும்
கருத்தோடு ஆய்கின்ருன் கடைசி யாக
ஒருவனெருத் திக்குரிய உறவி லுள்ள
ஒழுக்கத்தைச் சொல்லுகிருன் உவக்க நாமே.

ஆயகலை யாவுமறிந் தமைதி கண்ட
ஆன்றதமிழ் புலவர்பெரு மானின் போதம்
தூயநெறி காட்டுகிற தென்று நாமோ
சொல்வதிலே பயனில்லை; தொடர்ந்து நித்தம்
தீயவழி நீக்கியுயர் சிறந்த மார்க்கம்
சித்திக்க வாழ்ந்துவர முயற்சிப் போமேல்
மாயவுலகம் சுவர்க்கமாகும் தூய
மறைதந்த வள்ளுவனும் மகிழ்ச்சி கொள்வான்,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் அறம் . . .

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

தெய்வப்பற்று அனைத்தையும் கடந்து ஓர் உயர் அறவாதியாக 'உலகத்தோடு ஒட்டி' விளங்கும் 'அறிவாக' வள்ளுவன் நாமம் நிலைபெறுகின்றது. மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழும் கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படையாக மாறும் என்ற உண்மையை ''இரந்தும் உயிர் வாழ்தல் நீதியல்ல'' என்று வற்புறுத்துகின்ற வள்ளுவன் கூறுகிறான். ''நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை''யாய அறம் ஒன்று உண்டு என்றும் அதுவே உலகத்தறிஞர் எவரும், நீதியை உபதேசித்த உத்தமர் அனைவரும் வற்புறுத்தும் ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்பண்பு'' என்று வள்ளுவம் கூறுகின்றது.

வள்ளுவன் ''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்'' அப்பொருளின் மெய்ப்பொருள் கண்ட அறிவுக் கடல். தாக்சத்திற்கு அப்பாற்பட்ட ஒரு பேரறிவுச்சுடர் அரசனுக்கென்று வள்ளுவன் கூறியவை ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்று மாற்றப்பட்டிருக்கும் புதிய சூழலில் குடிமக்களாகிய முடியற்ற வேந்தர்கள் அனைவர்க்கும் பொருந்தும். சிறு பராயத்திலேயே திருக்குறள் தமிழ்க் குழந்தைகள் அனைவருக்கும் ஊட்டப்படுதல் அவசியம். எமக்கென அமைந்த உலகப் பொதுமறையைப் படித்து நாம் இன்புறுவதோடு உலகு இன்புறுமாறு வாழ்வதே வள்ளுவருக்கு நாம் செய்யும்கைம் மாறாகும்.

---

## தனது மகிழ் . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தரத்திற்கும் எதிரான வழக்கு ஒன்று இக்கோர்ட்டில் உண்டு. புரையல் கிடைக்காத தகராறு காரணமாகவே முதலாவது எதிரிக்கு வாள்வெட்டு விழுந்தது. சினிவாசகமும் சோமசுந்தரமும் தொழில் சம்பந்தப்பட்ட எனது சிநேகிதர்கள் எனது மனைவியும் நானும் ஜோடியாக இரண்டாவது எதிரியின் வீட்டிற்குப் போகவில்லை. இரண்டாவது எதிரியின் மனைவி விசாலாட்சி எனது வீட்டிற்கு அநேகமாக வருவார் கிணற்றடியில் தண்ணீர் அள்ளும்பொழுதே தனது சந்தோசமில்லாத வாழ்க்கையைப் பற்றி விசாலாட்சி கூறுவார். தினமும் கிணற்றடியில் சந்திக்கும்பொழுது மகிழ்ச்சியற்ற வாழ்க்கை பற்றி என்னிடம் கூறுவார்''

கிளிநொச்சி ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி டாக்டர் சின்னத்துரை ஜெகதீசன் இறந்த பிள்ளைகளின் மாமியாரான இராசா கோமளம் [வயது 20] கந்தையா மீனாட்சி ஆகியோரும் சாட்சியமளித்தனர்,

ஜூன் 4-ந் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## வாலிப முன்னணி ஆண்டு விழா


காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணியின் 3வது ஆண்டுவிழா இம்மாதம் 23ந் தேதி காங்கேசன்துறை வெளிச்ச வீட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் ஆண்டுவிழாவில் தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா, தொழில் மந்திரி திரு. ஐவைப் எம் எச். முகம்மது ஆகியோரும் கலந்து கொள்வார்களெனத் தெரிகிறது.


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி வருகின்றனர்.




அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.


அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர்

உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.





உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதல் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்க சந்தர்ப்பம் அளிக்கப்படும்.



சீட்டிழுப்பு இல. 143

சீட்டிழுப்பு இல. 143 தேதி மே 25 1967
புத்தம்புதிய கோல்டன் ஸ்பெஷல் சேடன்கார் ரூ 17,350 -



சீட்டிழுப்பு இல. 144

சீட்டிழுப்பு இல. 144 தேதி ஜூன் 6 1967
புத்தம்புதிய மொரிஸ் மினிமோக் ரூ. 9,100. -

இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கம்பெனி பட்டியல்விலைகளாகும். இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாட்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

## போட்டியில் பரிசுபெற்றவர்கள்

1 டபிள்யு. முனசிங்கி, மத்துகம.
2 எம். டபிள்யு. ஜெயதிலகே, [ஹபறன.
3 நந்தா நல்லகலா, நீர்கொழும்பு.
4 ஆர். டி. அமராவதி, நீர்கொழும்பு.
5 ஜே. ஏ. ஜெயதிலகே, ஹிற்றிமுல்ல.
6 எஸ். எம். முத்தலிவ், பஸ்சியால்ல.
7 என். லோறன்ஸ், பாமன்கட.
8 டபிள்யு. ஏ. ஜே. திஸ்சற, யா ஏல.
9 எம். வி. பெர்ணண்டோ, [கிந்தோட்ட.
10 கே. மகாலிங்கம், கொக்குவில்.
11 கே. ஏ. டி. பி. பெரேரா, [பண்டாரகம.
12 எல். எம். ரூபசிங்கி, மாவனெல்ல.
13 எஸ். கருணரெட்னே, [கடுகஸ்தோட்டை.
14 டபிள்யு. ஜி. குறுன் அப்பு, காலி,
15 யு. எல். ரூபன் சிங்கி, ஹோமகம.
16 டபிள்யு. ஜி. ரணவீர, மாத்தளை.
17 எல். விஜயசேன பீரிஸ் [அழுத்துகம.
18 எம் டி வ்வோட், அங்கொடை.
19 ஈ. அமிர்தலிங்கம், பருத்தித்துறை
20 ப. நடராஜா, யாழ்ப்பாணம்.
22 ஆர். இராசையா, அலவத்துக் [கொட.
22 ஜி. கிரிலமையா, ஹிங்கருக்கொட.
23 எஸ். குணத்திலாகா, [மொறட்டுவா.
24 ஆரியபாலா மாகநலிந்தன, [ஹம்புறுகல
25 கே. ஜி. என். அல்விஸ். கம்பளை.
26 ஜே. ஏ. எம். கர்மசூரியா [கொட்டடெனியய.
27 ஜே. கே. எம். ரி. பண்டா, [கொலபிஸ்ச
28 ஆர் ஈ. சோமசிங்கி றம்புவா [எஸ். பி. ஓ.
29 எம். எல். பியசேன, திப்புவான.
30 கே. எம். பிறேமாவதி, களனி.
31 யு. டி. எல். பெரேரா, [குளியாப்பிட்டியா
32 ஏ. எம். புஞ்சிபண்டா, [ரிக்கிலிகஸ்கட.
33 ஜே. டி. ஈ. அப்புஹாமி, [கொச்சிக்கடை.
34 கே. ஏ தோமஸ், டிவுலப்பிட்டியா.
35 எம் இக்பால், களுத்துறை,
36 ே குணரெட்னே, அங்கொடை.
37 எஸ். பி சுந்தரராஜா, டிக்கோயா,
38 ஏச். ஏச். தயானந்தா. [உடஹெந்தன.
39 எஸ். பியதாசா, பாணந்துறை.
40 டி டபிள்யு. எஸ். ஜெயசிங்கி, கண்டி
41 கே. ஏ. ரி பத்மினி, குணபால.
42 ஏ. ஜி. றிகோமால்ட், லிண்டுள.
43 ஐ எல அலியார், சாய்ந்தமருது,
44 டபிள்யு. ஏ. டபிள்யு. அப்புகாமி, [மொறட்டுவா.
45 ஏ.சி ஏ. சமரக்கோன், பிலியந்தல.
46 ரி. சி ரூபசிங்கி, தில்லப்போல.
47 கே. வீரர் சில்வா, சேதுவ.
48 எம். டபிள்யு. பி. பண்டார. [மாத்தளை.
49 எஸ். எஸ். ஜாப்பா, மொடரு.
50 எல். எஸ். குணத்திலாகா, [மண்டாவெல.

பரிசு பெற்ற இல- 42

பரிசு பெற்றவர்களுக்கு தலா ரூபா 25க்குரிய தபாற்கட்டளை 1967ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ந் திகதி தபாலில் அனுப்பி வைக்கப்படும்

## ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகரசபையின் பௌர்ணமி தின கலை நிகழ்ச்சி ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபை அளித்துவரும் பௌர்ணமி கலை நிகழ்ச்சிகளின் 3வது ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 23ந்திகதி தொடக்கம் 25 ம்திகதிவரை யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் இடம்பெறுமென்றும், மூன்று தினங்களிலும் மாலை 6-30 மணியிலிருந்து இரவு 9-30 மணிவரை கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலிரு நாட்களும் நாடகவிழாவாகவும். 3ம் நாள் கதம்பநிகழ்ச்சியாக அமையுமென்றும், பாடசாலைக்கான நாடகவிழாவில் முதல் நாள் பெண்கள் பாடசாலைகளுக்காகவும், 2ம்நாள் ஆண்கள் பாடசாலைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வேம்படி மகளிர் கல்லூரி யாழ். இந்துமகளிர்கல்லூரி, யாழ், மத்திய கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகள் நாடக நிகழ்ச்சிகளில் பங்குபற்றவிருக்கின் றன.

## பெயர்ப்பலகைகளில் சிங்களத்துக்கு முதலிடம்

### எம். பி. யின் கேள்விக்கு உதவி மந்திரி பதில்

கொழும்பு, ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெயர்ப் பலகைகளில் இனிச் சிங்களத்துக்கு முதலிடமும், தமிழ் ஆங்கிலம் ஆகியவைகளுக்கு இரண்டாம் மூன்றும் இடங்களும் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மராமத்து தபால் தொடர்பு உதவி மந்திரி திரு. விஜயபாலமெண்டிஸ் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் திரு. லக்ஸ்மன்ஜெயக்கொடியின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

நாடுமுழுவதிலுமுள்ள மராமத்துப்பகுதி வீதிகளிலுள்ள பெயர்ப்பலகைகளில் சிங்களத்துக்கு முதலிடம் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக உதவிமந்திரி தெரிவித்தார்.

## இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று வண்ணார்பண்ணை மேற்கு ஐயனார்கோவிலடி விசுவேசப் பிள்ளையார் கோவிலில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. ஆண்டுதோறும் நடைபெறும் பெருவிழாத் தொடரின் சிறப்பு விழா இதுவாகும். நாளை நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுடன் இவ்விழாத் தொடர் முடிவடையும். இன்று பயன்படுத்தப்படும் தேர் மிகப் பழமையானதாகையால் தேர்த் திருப்பணி பேரவை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

புதிய தேர் செய்வதற்கு 50,000 ரூபா தேவை என்றும் 30,000 ரூபா வரை பொதுமக்கள் கொடுத்து உதவ முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
THE SATAN BUG
9-45 p. m.
'மேரே மெஹ்பூப்'
[இந்தி]



4-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]
மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.

ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனோகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணா


## இன்று ஆரம்ப....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளோவியக் கண்காட்சியைக் காரியாதிகாரி திறந்து வைப்பார். 6-00 தமிழ் வாழ்த்து, திருக்குறள் ஓதல். தொடர்ந்து சங்கானைப்பட்டினசபைத்தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் வரவேற்புரையும், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் தலைமையுரையும் நிகழ்த்துவர். பின்னர் தலைமையுரையைத்தொடர்ந்து இரவு 7-15மணிக்கு 64, 66ம்ஆண்டுத் தமிழ் மறைத்தேர்வில் பதக்கப் பரிசில் பெற்றவர்களுக்கு தலைவர் பரிசளிப்பார். 7-00 மணிக்கு விரிவுரைகள். இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் வித்துவான் பொன். முத்துக்குமாரன், செல்வன்அ. புராந்தகன், திரு. ஆ. தேவராசன் ஆகியோர் உரைநிகழ்த்துவர். 8-30 கவியரங்கு. பங்குபற்றும் கவிஞர்கள்- இ. நாகராஜன், செ. கதிரேசர்பிள்ளை, அம்பி, வித்துவான் க. கணபதிப்பிள்ளை, வி. கந்தவனம், திமிலைத்துமிலன். இரசிகமணி கனக செந்திநாதன் கவியரங்கிற்குத் தலைமை தாங்குவார்.

இரவு 9-30 மணிக்கு திரு. அ. தையல்பாகர் ஜே.பி தலைமையில் கலையரங்கு ஆரம்பமாகும். செல்வி இராசரத்தினம் சுப்பிரமணியத்தின் இன்னிசைக் கச்சேரியும், ''வாழ்வைத் திருத்திய குறள்'' என்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியினரின் நாடகமும், ஏ.ரி. பொன்னுத்துரை டைரக்ட் செய்யும் குரும்பசிட்டி சன்மார்க்க நாடக மன்றத்தாரின் ''பிற்பகலிலே...'' என்ற நாடகமும் கலையரங்கில் இடம்பெறும்.

## தமிழ்மறைக் கழகத்தலைவர் செய்தி

அமைதியின்றி அல்லலுறும் உலகத்திற்கு பிறரையும் தம்மைப் போல்மதித்து அன்புடனும் அருளுடனும் அறநெறியில் இன்பமாக வாழும் வாழ்வை வகுத்துக்காட்டும் திருக்குறளை உலகம் முழுவதும் போற்றவேண்டும். திருக்குறளை மக்கள் எவ்வளவுக்குப் போற்றுகிறார்களோ அவ்வளவுக்கு மக்கள்குலம் உயர்வடையும் திருவள்ளுவர் நாளை போற்றும் சிறப்பிதழ் வெளியிடும் ஈழநாடு பத்திரிகைக்கு எனது பாராட்டுகள்.

இவ்வாறு தமிழ்மறைக் கழகத்தின் தலைவர் பண்டிதர் க. பொ. இரத்தினம் பா. உ. விடுத்துள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!



நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம்.ஜி.ஆர். - விஜயா
நடித்த
தாயின் மடியில்



MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
David Niven
in
CAPTIVE CITY


## பட்டமும பாராட்டும

கொழும்பு, ஞாயிறு

ஸ்ரீதியாகராஜசுவாமிகளின் 200 வது ஜெயந்தி விழாவில் வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயக ஆலய பண்டபத்தில் அளவெட்டி என். கே. பத்மநாதனுக்கு நீதியரசர் எச். டபிள்யூ. தம்பையா கியு. சி. பொன்னுடை போர்த்தி ''ஏழிசை வேந்து'' என்ற கௌரவப் பட்டத்தை சூட்டினர்.

## மூளாய் கொலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மகன் கணபதி தெய்வேந்திரனும் சுட்டுக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் பி. இரகுபதி புறக்டர் குலநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் எஸ். தில்லையர் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரியதரப்பில் அட்வகேட் திஸா பண்டாரநாயக்கா ஆஜரானார்.

தீர்ப்பை அறிவதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும்ஏராளமானோர் திரண்டிருந்தனர். வழக்கறிஞரின் தொகுப்புரை முடிவடைந்ததும் நேற்றுப் பிற்பகல் 4 மணிவரை நீதியரசர் உரைநிகழ்த்தினர்.

ஜூரிசபையினர் பிற்பகல் 4 மணிக்குத் தனிமையாகச் சென்று மந்திராலோசனை செய்தனர்.

பிற்பகல் 4 30 மணிக்கு ஜூரிகள் வந்து தங்கள் ஆசனத்தில் அமர்ந்தனர். நீதியரசர் வந்து அமர்ந்ததும், ஜூரிசபையினர் ஏகமனதாக இரு எதிரிகளும் குற்றவாளிகளல்லர் எனத் தீர்ப்பளித்தனர்.

இருவரும் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறீர்கள் என எதிரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டதும் இரு எதிரிகளும் கைகூப்பி வணங்கிவிட்டு, கூண்டிலிருந்து இறங்கிச் சென்று பார்வையாளர் வரிசையில் அமர்ந்தனர்.

வடபகுதி அசைஸ் விசாரணை மீண்டும் இம்மாதம் 26-ம் திகதி காலை ஆரம்பமாகும்

### 'கடவுள் தான் காப்பாற்றினார்'

யாழ்ப்பாணம், திங்கள்

'நான் காப்பாற்றவில்லை. கடவுள்தான் உங்களைக்காப்பாற்றினார். முதலில் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்யுங்கள்' என மூளாய் கொலை வழக்கில் எதிரிகளுக்காக ஆஜரான அட்வகேட் இரகுபதி விடுதலையடைந்த கணபதியிடம் கூறினார்.

இவ்வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டதும் விடுதலையடைந்த கணபதி சென்று 'நீங்கள் தான் எங்களைக் காப்பாற்றினீர்கள்' என்றுகூறியபோதே அட்வகேட் இரகுபதி மேற்கண்டவாறு கூறினார்.

கணபதியும் அவரது மகன் தெய்வேந்திரனும், இரகுபதியை கைகூப்பி வணங்கினார்கள். விசாரணையைப் பார்க்கவந்தவர்கள் இரகுபதியைப் பாராட்டினார்கள். கணபதியின் சொந்தக்காரர் ஒருவர் இரகுபதியின் பாதங்களைத் தொட்டுவணங்கினார்

நீதிமன்றத்திலிருந்து விடுதலையடைந்த தந்தையும், மகனும் உட்பட சுமார் 100 பேர் அட்வகேட் இரகுபதியை ஊர்வலமாக வழக்கறிஞர் நூல்நிலையம் வரை அழைத்துச் சென்றார்கள். இங்கிருந்து முனீஸ்வரர் கோவிலுக்குச்சென்றுவணங்கினார்கள். அதன்பின் மண்கும்பானிலுள்ள ஒரு கோவிலுக்குச் சென்றனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ். நகரில்

## புதிய அரசாங்க விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், திங்கள்

''கூட்டுறவு இயக்கங்களை வளர்ப்பதற்கு அரசாங்கம் கூடிய முயற்சி செய்து வருகிறது. இப்படிப்பட்ட நிலையங்கள் மூலம் மக்கள் நியாயமான விலையில் பொருட்களை வாங்க முடியும்''.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திற்கு எதிரில் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்ட விற்பனை திணைக்கள விற்பனை நிலையத்தின் திறப்புவிழாவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மேற்கண்டவாறு கூறினார்.

விற்பனை அபிவிருத்தி ஆணையாளர் திரு. கே. பி. திஸநாயக்கா தலைமையில் திறப்புவிழா நடைபெற்றது. திருமதி வேர்ணன் அபயசேகரா விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்தார்.

## பொலிஸ் துப்பாக்கி..

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

தம் கிடந்த இடத்திற்கும் சந்திக்கும் இடையில்காணப்பட்டதாக அன்று இரவு 10 மணிக்கு அவ்விடம்வந்த காங்கேசன்துறைத் தலைமை இன்ஸ்பெக்டர் திரு. மூர்த்தி கூறியதும் இதற்கு ஆதாரமாகும். பொலிஸ் சாட்சிகள் யாவும் இந்த வான் அந்த இடத்திற்கு எப்படி வந்ததென்று சொல்லவில்லை. ஆகவே பொலிஸார் முதற்தடவை சனக்கூட்டத்தைநோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தபொழுதுதான் காலஞ்சென்றவர் இறந்தாரென்பது சந்தேகத்திற்கு இடமாகிறது. பொலிஸ் சாட்சியங்களுக்கு எதிராக கூறப்பட்ட மற்றையோரின் சாட்சியங்களுக்கு ஆதாரமாக அந்த வானும் அந்த இடத்தில் காணப்பட்டது.

சந்தேகத்துக்கு நடந்ததென்பதில் இடமில்லையெனவும் கூறினார். காலஞ்சென்றவர் பொலிசாரின் துப்பாக்கிப்பிரயோகத்தினால் கொலை செய்யப்பட்டாரென்பதே தமது கருத்து என நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

இன்ஸ்பெக்டர் பத்திராஜவுக்கு 26 காயங்களும், சார்ஜன்ட் இராசரத்தினத்திற்கு 17 காயங்களும், லெப்டினன்ட் விஜயரத்தினவுக்கு 2காயங்களும் துவக்கு சூட்டுக் காயங்களாகவும், பொலிஸ் கான்ஸ்டபிள்களான பிள்ளையகுரு, திசநாயக்கா, பியதாசா, சில்வா, பெர்னண்டோ ஆகியோருக்கு போத்தல், கற்களால் ஆன காயங்கள் எனவும் தெரிவித்த நீதிபதி பொது சனத்திற்கும் பொலிசாருக்குமிடையில் துப்பாக்கிப் பிரயோகங்கள்.

வல்வை மக்கள் சார்பில் அட்வகேட் எம். சிவசிதம்பரம், அட்வகேட்கே. மோதிலால்நேரு, வழக்கறிஞர்கள்என். நடராசா, எஸ். சண்முகசுந்தரம், கே இரத்தினசிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள். பொலிசார் சார்பில் ஏ. எஸ். பி. தவராசா, இன்ஸ்பெக்டர் இராமநாதன் ஆகியோர் ஆஜரானார்கள்.

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறைவாடிவீட்டிற்கு அரசாங்க அதிபர் திரு, வேணன் அபயசேகரா விஜயம் செய்து அங்குள்ள குறைகளை ஆராய்ந்தார். வாடி வீட்டுப்பொறுப்பதிகாரி அரசாங்கஅதிபருக்கு வாடிவீட்டிலுள்ள குறைகளை விபரித்தார். விரைவில் குறைகளைத்தாம் நிவர்த்தி செய்வதாகவும் வாடிவீட்டை வசதிகளுடன் திருத்திஅமைப்பதற்குமுயற்சிஎடுப்பதாகவும் அரசாங்கஅதிபர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org